செ. கு. எண்: 115 நாள்: 24.09.2019

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 24.9.2019

**திருப்பூர் மாவட்டம்,** திருமூர்த்தி அணையிலிருந்து பாலாறு படுகை நான்காம் மண்டல பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் திறந்துவிடக் கோரி பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட பாலாறு படுகை முன்னோடி விவசாயிகள் உள்ளிட்ட வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட பாலாறு படுகை முன்னோடி விவசாயிகள் உள்ளிட்ட வேளாண் பெருங்குடி மக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருப்பூர் மாவட்டம், திருமூர்த்தி அணையிலிருந்து பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில் பாலாறு படுகை நான்காம் மண்டல பாசனப் பகுதிகளுக்கு **25.9.2019 முதல் மொத்தம் 7600 மி.க. அடிக்கு** மிகாமல் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால் கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள **94,068 ஏக்கர் நிலங்கள்** பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9